ௐ

தக்ஷலக்ஷ

ஸ்ரீபரப்ஹ்மணேநம:

சற்குரு

# தோத்திரப் பாமாலை.

இது.

நிச்சல, இராமநந்த சுவாமிகள்

சீடர்களி லொருவராகிய,

சொருபாநந்த மணிசுவாமிகள்

இயற்றியது.

சென்னை,

கோமளேசுவரன் பேட்டை,

சச்சிதாநந்த அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப் பட்டது.

1911௵.

இது

காஞ்சீபுரம்

பச்சையப்பன் ஐஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத் - வெண்பாப்புலி,

## வேலுசாமிபிள்ளை அவர்களியற்றிய

**அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.**

நீர்கொண்ட செருக்கச்சி நிச்சலரா மாநந்த நிபு
ணன் றருளி, ஞார்கொண்ட செந்தமிழி னறுமணங்கால்
சொல்லலங்க னவின்ற ணிந்தான், பேர்கொண்ட வன்ன
வன்பாற் பேசரிய யோகநிலை பெரிது ணர்ந்தோ, னேர்
கொண்ட நற்சொருபா நந்தமணி யெனும்பெயர்கொ
ளியல்வல் லோனே.

ஸ்ரீ

ஸத்குருப்ரஹ்மணே நம:

# தோத்திரப்பா மாலை.

நேரிசை வெண்பா.

நீயொன்று கேண்மனமே நிச்சலரா மாநந்தன்[மையுறா
வாய்கொண் டுரைக்கவொணா வாழ்வளித்தான் - றாய்
மன்னோன்மே னற்பதிகம் யான்பாடிப் பேறெய்த
முன்னோன் கருணைநிற்கு முன்.

பதினொந்து சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

1. அருள்பொழியு மாநந்த வடிவினின் றாடிடு
 மற்புதத் தலைவ விந்த
 வறிவிலேன் றிருவருளை யடையாம லநுதின
 மாசையாம் வேசி மோக
மருள்வலையி லேவீழ்ந்து மண்வேண்டி மனைவேண்டி
 மாநிதிகள் பலவும் வேண்டி
 மனம்போன போக்காக மந்திபோ லேயோடி
 மாளாத துயர டைந்தே
யிருளறையிற் கண்ணிலாச் சேய்போல வேயலறி
 யேங்குமிவ் வேழை யேற்கே
 யின்னமுது கன்னல்செந் தேறல்கற் கண்டுதமை
 யிதமுடன் கலந்த ளித்துக்
கருவறையிற் சேர்க்காது திருவுள மிரங்கியே
 காட்சிதந் தாண்ட குருவே
 கச்சிநகர் மெச்சவரு நிச்சலரா மாநந்த
 கருணைபொழி கின்ற முகிலே.

2. வண்டமர்நற் கழலானீள் புகழுடையா னருட்சோதி
வள்ளலாம் ராம லிங்கம்
வண்மையி னளித்தமா வருட்பா வெனும்மமுத
வாரிதியை யுண்டு நாளும்
விண்டவர்கள் கண்டிடா வித்தகன் றானாகி
விளங்குமரு ணாசலேசன்
விரைவாவிண் முகிலெனக் கூடியே கொடியதாம்
வெப்பமுற் றவர்க ளிக்க
எண்டிசையுங் குமுறியே தேன்மாரி பெய்துநித
மின்பமாய் வளர்ந்த குருவே
யித்துவித போகமற வென்னைமே லேற்றியே
யேகாந்த போக நல்கிக்
கண்டவர்க ளுள்ளமதிற் கங்குலற வொளிவீசுங்
கதிர்கொண்மா ணிக்க மணியே
கச்சிநகர் மெச்சவரு நிச்சலரா மாநந்த
கருணைபொழி கின்ற முகிலே.

3. பொல்லாத புன்புலாற் பொய்யுடலை மெய்யென்று
பொய்வேட மிகுதி காட்டிப்
பூதலத் தெங்கணும் புலம்பித் தவித்திடும்
புன்மையே னன்பி லாமற்
கல்லாத நாயினுங் கடையான மூடனாய்க்
கயவர்தம் வாயில் காத்துக்
காலங் கழித்தனன் கட்காம வெறியனாய்க்
கார்பூத்த கண்டத் தனை
நல்லார்கள் போற்றவளர் வல்லார்கள் நால்வர்க்கு
நானெனு மகந்தை நீங்க
நாதாந்த வெளிகாட்டிப் போதாந்த முடிசூட்டி
நற்றவி சளித்த நலமே

கல்லாலின் கீழ்மேவுங் கண்மூன்று முடையவா
கதியளித் தினியாளு வாய்
கச்சிநகர் மெச்சவரு நிச்சலரா மாநந்த
கருணைபொழி கின்ற முகிலே.

4. கொஞ்சுமொழி யாம்பல்வாய்ப் பஞ்சடிநல் வஞ்சியாங்
கொடிபடர்ந் தோங்கு தருவே
கோசங்க ளைந்தினையு நாசமுற வேசெய்த
கோமளா கார குருவே
வஞ்சப் புலக்கள்வ ராலெனஞ்ச மிளகியே
வன்பவக் கடலின் மூழ்கி
வாடாது வாடுமென் வாட்டமது கண்டுநீ
வாவென் றழைத்து முடிமேல்
செஞ்சரணை யேபுனைந் தச்சிவத் தீக்கையாற்
றிரிமல மகற்றி யென்றுஞ்
சின்மயா நந்தசுக வெள்ளத் தழுத்திடுந்
தேசோமயப் பிரமமே
கஞ்சமலர் வாசனுங் கார்பூத்த வண்ணனுங்
காணொணா வேகாந் தனே
கச்சிநகர் மெச்சவரு நிச்சலரா மாநந்த
கருணைபொழி கின்ற முகிலே.

5. மண்ணுளு மன்னவர் மற்றுமுள தேவர்கள்
மதிகதிர்க ளான பேர்கள்
வாரிஜ வரோதயன் றிருமா லுருத்திரன்
மகேச்சுரன் சதாசி வன்முதல்
நண்ணாத சேவடியை நாயினே னுள்ளத்தி
னட்டியருள் சோதி மணியே
நானெனவு நீயெனவு மிரண்டில்லை யென்னவே
நற்சொருப னாக்கு முறவே

பண்ணுளர் போற்றவளர் பரமசாம் பிராஜ்பனே
பட்சம்வைத் தெனைமன் றிலே
பற்றறக் கூடியே பார்க்குமுன் முப்புரம்
பாழுறச் செய்த பதியே
கண்ணுள ளுகிவளர் கற்பனு தீதனே
காத்தாளுங் குருநா தனே
கச்சிநகர் மெச்சவரு நிச்சலரா மாநந்த
கருணைபொழி கின்ற முகிலே.

6. இன்பவடி வானசிவ ராசசுக யோகத்தி
லேகாந்த நிட்டை பெற்று
ஈடறு திகண்மூன்று மென்றும்வந் தெய்தாமல்
லித்துவித மறவொழித்தே
யன்புருவ மாகிவள ரத்துவித வாநந்த
மடிமையேற் கருள வேண்டி
யாநந்த மாகருணை வள்ளலென வுள்ளமரு
மாதிபரஞ் சோதி யுருவே
தன்பொறுப் பென்றவெனைத் தன்மயா காரமுறத்
தாள்சூட்டி யாட்கொண் டுமே
தன்னிகரில் செல்வத்தைத் தந்திடுங் கடவுளே
தாயினுங் கருணை யானே
கன்மநெறி யென்றுமே கைவிடாக் கயவர்கள்
காணுக் கெம்பீ ரனே
கச்சிநகர் மெச்சவரு நிச்சலரா மாநந்த
கருணைபொழி கின்ற முகிலே.

7. பாவாகி நின்றுருகும் பழவடியர் பூசித்துப்
பணிந்துமே போற்றி வாழும்
பண்ணேபண் மயமேபண் ரஸமேபண் சுவையே
பண்ணின்ப மேவு பதியே [நற்
தேவாதி தேவர்க டேடவள ரமுதமே
தேனூறு பாய்ந்த கனியே

சீர்மேவு மணிமன்றிற் சிவகாமி யோடுவாழ்
தீங்கரும் பான வின்பே
காவாற நின்னருளை நான்பாடி நாட்டமற
நாதாந்த வெளியி லுய்ய
நானென்று நாய்வந்து நாடாம லென்றனை
நலிந்து போகத் துரத்திக்
காவாயென் றுன்னடிமை கதறுகின் றேன்றிகழ்
கண்மூன்று பெற்ற கோவே
கச்சிநகர் மெச்சவரு நிச்சலரா மாநந்த
கருணைபொழி கின்ற முகிலே.

8. அம்பலத் தாடுநின் னருளையா ரறிவர்கா
ணாரணத் துறைக ளெல்லா
மறிந்திட விரும்பியோ ரணுவளவுங் காணும
லயர்ந்திடைந் திருக்கு மென்னிற்
செம்புணு லேகுழைத் தேசுவா மைத்துச்சீழ்
சேர்ந்திடும் பொத்தை வீட்டிற்
சிறியேனைச் சிறைசெய்து வைத்துகிரு மிகடுன்ன
சேயவெந் தீவெ துப்ப
வம்புசெறி காமாதி கள்வர்கள் வாட்டவும்
மடிபிடித் தீர்க்கப் பசிநோய்
வாட்டவும் மைந்தனே னறிந்திட வாய்க்குமோ
மகாநுபா வாவொ ழுங்காக்
கம்பமே காத்தருள் முத்தேவர் சூடிடுங்
கழல்சிரஞ் சூட்டி யாள்வாய்
கச்சிநகர் மெச்சவரு நிச்சலரா மாநந்த
கருணைபொழி கின்ற முகிலே.

9, எல்லாமுஞ் செய்கின்ற விறைவனே யெனைமண
மின்றுநீ புரிந்தெ னுருவ
மின்படைய மான்காட்டி மான்பிடிப் பதுபோல
வெனையடிமை யாக வாக்கி

வல்லாள ஞகிவளர் முதலேநன் மாணிக்க
மணியே பசும்பொன் வரையே
வாதாடு சமயநெறி மேவாத வள்ளலே
மணிமன்றி லொளிரு சுடரே
கொல்லாத விரதமெய்க் கொண்டா ருளத்தினிற்
கோதிலா திலகு மமுதே
கூறுபார் முதஞத வரையுமப் பாலுமே
குலவியமர் கின்ற நிறைவே
கல்லாத நாயேனைக் காத்தாண்ட கண்யனே
கமலால யக்கட வுளே
கச்சிநகர் மெச்சவரு நிச்சலரா மாநந்த
கருணைபொழி கின்ற முகிலே. [நித

10. ஐங்கணையி னகிலத்தை யைந்தொழிலாற் செய்து
மஞ்ஞானக் கடலி லாழ்த்து
மங்கசன் றனைநெற்றி வழியா னெரித்துநீ
ருக்கியம் புலிசடை விடை
ஐங்கரன் சுதனெங்க ளன்னையுமை பாகங்கொ
ளாநந்தா தீத மோன
வற்புதச்சிற் சபைவாழு மாதியே யழிவிலா
தமலமார் பரஞ்சோ தியே
பொங்கிவரு பூரணப் புண்ணியா கண்ணியா
பொய்யுடலி லாசை வைத்துப்
பொன்றேடி மணிதேடிப் பூவையர்க ளின்பத்திற்
பூரித்து மனம கிழ்ந்து.
கங்குலின் கண்சென்று கண்கெட்டு நிற்கையில்
கதியளித் தாண்ட குருவே
கச்சிநகர் மெச்சவரு நிச்சலரா மாநந்த
கருணைபொழி கின்ற முகிலே.

நிச்சலரா மாநந்தன் நீள்கழல்கள் வாழ்க.

ஸ்ரீ

குருப்யோ நம:

# தோழிக் குரிமை யுரைத்தல்.

### கண்ணிகள்.

1. சீருட் சோதியைச் சேர்ந்திடப் பெற்றோஞ்
சிற்பர மாகிநாஞ் செனனமு மற்றோம்
நீர்மலி வேணிய னிசநிலை பெற்றோம்
நிச்சல ராம்தந்த நிதியிது கண்ணே.

2. கற்பனை யாவையுங் கடந்திடப் பெற்றோங்
காரண காரியங் கண்டிட ரற்றோம்
நிர்க்குண மாகிநி லைத்திடப் பெற்றோம்
நிச்சல ராம்தந்த நிதியிது கண்ணே,

3. சச்சிதா நந்தமுந் தாமாகப் பெற்றோஞ்
சாகாக் கலைகற்றுச் சாரபவ மற்றோம்
நித்தியா நந்தனாய் நின்றெங்கு முற்றோம்
நிச்சல ராம்தந்த நிதியிது கண்ணே.

4. தூங்காமற் றூங்கிடுந் தூக்கமும் பெற்றோஞ்
சும்மா யிருக்கச் சுகோதய முற்றோம்
நீங்காத வல்வினை நீங்கிடப் பெற்றோம்
நிச்சல ராம்தந்த நிதியிது கண்ணே.

5. ஆசைபயம் வெட்க மற்றிடப் பெற்றோம்
ஆநந்தத் தாண்டவ மாடநா முற்றோம்
நேச னடிமலர் நிதஞ்சூடப் பெற்றோம்
நிச்சல ராம்தந்த நிதியிது கண்ணே.

6\. வேத முடியில் விளங்கிடப் பெற்றோம்
வேண்டல் வேண்டாமை விடுத்திடப் பெற்றோ
நீதன்சொ லுட்கொண்டு நிகரறப் பெற்றோம்
நிசசலராம் தந்த நிதியிது கண்ணே.

7\. கலக விழியார் கலவியை யற்றோங்
கண்மூன் றுடையானைக் காணவும் பெற்றோம்
நிலையிற் பிரியாத நின்மதி யுற்றோம்
நிச்சல ராம்தந்த நிதியிது கண்ணே.

8\. சமரச சன்மார்க்க சங்கத்தை யுற்றோஞ்
சற்குரு ராஜனைச் சார்ந்திட றற்றோம்
நிமல வருட்பார்வை நேர்ந்திடப் பெற்றோம
நிச்சல ராம்தந்த நிதியிது கண்ணே.

9\. பற்றறப் பற்றிடும் பண்பினைப் பெற்றோம்
பாணியி லேபலி கொள்ளவும் பெற்றோம்
நெற்றிக் கண்ணுற்பவ நீறாகப் பெற்றோம்
நிச்சல ராம்தந்த நிதியிது கண்ணே.

10\. பற்பல யோசனை பாழாகப் பெற்றோம்
பரம்பொருள் நாமாகும் பாக்கிய முற்றோம்
நிற்குநிலைதனி னின்றிடப் பெற்றோம்
நிச்சல ராம்தந்த நிதியிது கண்ணே.

தோழிக் குரிமை யுரைத்தல்

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

# அறிக்கை.

## மோக்ஷசாதன விளக்கம்.

இவ்வரிய பெரியநூலானது புராதனமாயுள்ள உபநிடதங்
ன் முக்கிய கருத்தையே சொரூபமாகக்கொண்ட ஒருபா
'குப் பதப்பொருள், பதசாரம், தாத்பர்யம், விசேஷவுரை
வகளுடனே தெள்ளிய செந்தமிழ் வசனநடையிற் குரு
சம்வாதமாக வெழுதப்பட்டிருக்கிறது. இஃதொன்று
பிருக்குமாகி னெல்லா சாத்திரங்களு மிருப்பதாகவே
ம். இஃது அறுபத்திரண்டு சம்வாதங்களும், 470-விஷ
மாகமுடிந்திருக்கின்றது. இதில்கிராலம்பமாதி உபநிட
, பகவத்கீதை பிரமகீதை பாதஞ்சல முதலிய ஸ்மிருதி
ணதிகாசங்கள் 54, வாதுளாகமம்பிரபுலிங்கலீலை தேவிகா
திரம் திருமந்திரம்திருவாய்மொழி தேவாரமுதலிய திரா
வேத நூல்கள் 149, விஷயங்களுக்கு தக்கவாறு பிரமாண
கக் காட்டப்பட் டிருக்கின்றன; உபநிடத முதலிய
ளின் சமஸ்கிருதவாக்கியங்கள் கிரந்தாக்ஷரத்திலும்
மின் அர்த்தங்களும் மற்ற நூல்களும் திராவிடாக்ஷரத்
மமைந்திருக்கின்றன. முக்கியவிஷயங்கள் குறிப்
லும் இருதலைப் பிறையிலும் நன்கு விளக்கியிருக்கின்
இந்நூல், டிம்மி 8-பேஜ் 72 பாரங்களடங்கியதா யுய
ளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு இந்நூலாசிரியர் படத்
நேர்த்தியாகக் காலிகோகட்டடஞ் செய்யப்பட்டிருக்
ஒவ்வொருவருக்கும் இந்நூலின்றி யமையாதென்பது
லைக் கண்ணுற்றபோதே விளங்கும்.

இதன் விலை ரூ 2—0—0.